17-10-53 — 500 Copies

திருநாராயணபுரம் கோயில் வரலாறு

385

கோபுரவாயிலும், கோயிலும்.

Q22:38·21142
N53
111709

ஸ்தான வெளியீடு

1953

உ

திருநாராயணபுரம் கோயில் வரலாறு.

திருச்சிராப்பள்ளி உறையூர் M. M. பெண்கள் உயர்நிலைப்பள்ளித்
தமிழ் ஆசிரியரும்
H. R. & C, E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும் ஆகிய
திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

மேற்படி தேவஸ்தானம்
தர்மகர்த்தா குழுவினர்
திரு. M. P. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள் B.A., B.L.
திரு. T. K. நடேசம் பிள்ளை அவர்கள்
திரு. T. A. புஷ்பநாதம் பிள்ளை அவர்கள்

நிர்வாக அதிகாரி
திரு. T. M. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்
ஆகியோரால் வெளியிடப்பெற்றது

தேவஸ்தான வெளியீடு

1953

உரிமை செய்யப்பெற்றது] [விலை **4** அணா

முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்குகின்ற சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. தென்னாட்டில் உள்ள வைணவத் தலங்களில் திருநாராயணபுரம் ஒன்று. இது திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிரி தாலுகாவில் தொட்டியத்துக்குப் பக்கத்தில் உள்ளது. பிரகலாதனுக்குப் பெருமாள் காட்சி தந்த தலம். கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் (**Hindu Religious & Charitable Endowments**) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்றது. இத்தலத்தின் பழம் பெருமைகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுச் செய்திகளும், துதிப்பாடல்களும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ வேதநாராயணப் பெருமாளின் அருள் வளத்தைப்பெறுக.

திருச்சிராப்பள்ளி
2—9—53.

R. பஞ்சநதம் பிள்ளை,
தமிழ் ஆசிரியர்.

உள்ளடக்கம்

		பக்கம்
1.	கோயிலும் இருப்பிடமும்	5
2.	கோயிலின் அமைப்பு	7
3.	கோயிலின் படம்	9
4.	மூர்த்திகளின் பெயர்கள்	10
5.	தீர்த்தங்கள்	10
6.	தலப்பெருமைகள்	10
7.	திருப்பணிகள்	11
8.	சிற்பச்சிறப்புக்கள்	12
9.	தினப்பூஜையும் திருவிழாக்களும்	12
10.	வருமானமும் சொத்துக்களும்	13
11.	நிர்வாகம்	13
12.	கல்வெட்டுக்கள்	14
13.	புராண வரலாறுகள்	17
14.	துதிப்பாடல்கள்	22

கருடாழ்வார் முன் மண்டபம்

திருநாராயணபுரக் கோயில் வரலாறு

மீனுமை கோலநெடு நரசிங்க மாயுலகை
விரகால ளந்தகுறளா
யானுக செங்கைமழு வல்வில்லு வெல்லுமுனே
யலமுற்ற செங்கையவராய்
வானுடர் வந்துதொழ வண்ணுடர் யாவரையும்
மருவிக்க வந்தவடிவாய்
நானுவி தங்கொள்பரி யாளாகி நின்றருளு
நாராயணுய நமவே.

1. கோயிலும் இருப்பிடமும்

ஆதி அந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தனது கடந்த நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து, பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகின்றுன். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு

அருள் செய்வான். "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே". மேலும் பரம் பொருளான இறைவனுக்கு பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்னும் ஐந்து வகை நிலை கள் உண்டு. இவற்றுள் பரத்வமாவது பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது திருப்பாற் கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை. விபவம் என்பது ராமகிருஷ்ணுதி அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது சராசரப் பொருள் எல்லாவற்றுள்ளும் எள்ளினுள் எண்ணெய்போல் மறைந்திருப்பது. அர்ச்சை என்பது விக்கிரக ரூபங்களில் ஆவிர்ப்பவித்தல். இந்த ஐந்து வகை நிலைகளில் அடியார்களுக்குக் காட்சிக்கெளிதாய், ஆலயங்களில் உள்ள மூர்த்திகளில் அருள் தன்மையோடு விளங்கி நிற்பதாகிய அர்ச்சை நிலையே சிறந்ததாகக் கூறுவர் சான்ருேர். "எளிதாக இந்த நெடுவேங்கடத்தில் எல்லோரும் தொழ நின்ருய்" எனக் கூறுகின்ருர் ஒருவர். ஆதலின் பெறுதற்கரிய மக்கட் பிறப்பைப்பெற்ற அனைவரும், பரம்பொருளாகிய இறைவனை அன்பிஞல் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் ஒழுகி அவனருளைப்பெற முயலுதல் சிறந்த கடமையாகும்.

தென்ஞடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், வைணவக் கோயில்கள், முருகன் கோயில்கள் முதலியன. இவைகளுள் சைவசமயத் தலைவர்களால் தேவாரப்பதிகம் பாடப்பட்ட திருக்கோயில்களும், ஆழ்வார்கள் பன்னிருவரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட

திருப்பதிகளும், திருப்புகழ்ப் பாடலைக்கொண்ட தலங்களும் உள்ளன. இவைகளுள் சேராத தனிப்பெருமைகளைக் கொண்ட திருக்கோயில்களில், இனும் **திருநாராயணபுரம்** என்னும் திருத்தலம் உள்ளது. இது திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிரி தாலூகாவில் சேலம் மோட்டார் மார்க்கத்தில், தொட்டியத்திற்குத் தெற்கே அரசலூர் வழியாக 2½ மைல் தூரத்திலும், திருச்சி ஈரோடு ரயில் மார்க்கத்தில் லாலாபேட்டை ரயில்வே நிலையத்திலிருந்து, காவிரி நதிக்கு வடகரையில் உள்ள வரதராஜபுரம் கிராமத்திலிருந்து மேற்கே ½ மைல் தூரத்திலும், முசிரியிலிருந்து மேற்கே 9 மைல் தூரத்திலும் உள்ளது. இது இனும் கிராமம், கோயில் தர்மகர்த்தர்களின் அங்கீகாரத்தின்பேரில் நியமிக்கப்பட்ட கிராம முன்சீப் ஒருவர் உண்டு. பெரும்பாலும் கோவில் சிப்பந்திகளைச் சேர்ந்தவர்களாய் சுமார் 300 குடிகள் உண்டு. இதற்கு வேதபுரி என்னும் பெயரும் உண்டு. (மைசூர் மேல் கோட்டையிலுள்ள திருநாராயணபுரம் என்னும் தலம் இதற்கு வேறானது.)

2. கோயிலின் அமைப்பு.

இத் தலம் நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் காவிரி நதிக்கு வடபுறத்தில் அமைந்துள்ளது, கோயிலைச் சுற்றிலும் சின்னஞ் சிறிய வாய்க்கால்கள் ஓடுகின்றன. கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. உள்ளே பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளியுள்ளார்கள். முன்வாயில் 3 கண்களையுடைய சிறிய கோபுரத்தை உடையது. முன்னேயுள்ள கல்தூணில் கருடன், அனுமன், சங்கு,

சக்கரம் முதலிய வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருடனைப் பெரிய திருவடி என்றும், அனுமனைச் சிறிய திருவடி என்றும் சொல்வதுண்டு. இத் தூணில் உள்ள அனுமாருக்கு முற்காலத்தில் பலி வழிபாடு நடைபெற்ற தாகத் தெரியவருகிறது.

இக் கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உண்டு. வெளிப் பிரகாரத்தில் தேரோட்டம் நிகழும். உள் பிரகாரத்தில் முன் மண்டபத்தில் கருடன் பெருமாளை வணங்கிக்கொண்டு நிற்கிறார். சுற்றிலும் பொன் மண்டபம், நாச்சியார், ஆண்டாள், சேனை முதலியார் சந்நிதிகள், வில்வமரம், யாகசாலை, மடைப்பள்ளி ஆகிய இடங்கள் உள்ளன. கோபுரத்துக்கு வெளியில் வாகன மண்டபம், ஆழ்வார் மண்டபம், தேவஸ்தான நிலையம், கிருஷ்ணமண்டபம், முன்மண்டபம் முதலிய இடங்கள் உள்ளன. ஆழ்வார் மண்டபத்தில் நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், உடையவர், ஆச்சாரியார் முதலியோர் உள்ளனர். வடக்கு மதிலில் சொர்க்கவாசல் உள்ளது. சிவன்கோயிலுக்குரிய வில்வமரம் உள்ளது. மூலமூர்த்தி ஆதிசேடன்மீது பள்ளிகொண்டிருக்கிறார். பாதத்தில் பிரகலாதர் வடிவம் உள்ளது. ஆதிசேடனுக்கு 10 முகங்கள் உள்ளன. கோயிலின் சுற்றளவு கிழமேலடி 248. தென்வடலடி 133. கோயிலின் அமைப்பைக்காட்டும் படம் தனியே உள்ளது. இக் கோயிலைச் சேர்ந்த சுற்றுக் கோயிலாக மாரியம்மன் கோயில் தனியே உள்ளது.

3. கோயிலின் படம்.

தென்வடல் அடி 133



எண்களின் விளக்கம்.

1. பெருமாள்
2. நாச்சியார்
3. ஆண்டாள்
4. பொன் மண்டப்ம்
5. உள்வாயில்
6. பரமபத வாயில்
7. வில்வ மரம்
8. மடைப்பள்ளி
9. உக்கிராணம்
10. யாகசாலை
11. வாகன மண்டபம்
12. ஆழ்வார்கள் சந்நிதி
13. தேவஸ்தான அலுவலகம்
14. கிருஷ்ண மண்டபம்
15. கோபுர வாயில்
16. வெளிமண்டபம்
17. கருடன் சந்நிதி
18. சேனை முதலியார்
19. அனும கருடகம்பம்
20. துவஜஸ்தம்பம்.



4. மூர்த்திகளின் பெயர்கள்.

இத் தலத்துப் பெருமாளுக்கு வேத நாராயணப் பெருமாள் என்றும், அம்மனுக்கு வேதநாயகி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. விமானம் வேதவிமானம் எனப்படும். வேதப்பெயராலேயே பெயர்கள் அமைந்துள்ளன. "வேத முதல்வன் விளங்குபுரி நூலன்" என்று ஆழ்வார் கூறுகின்ருர்.

5. தீர்த்தங்கள்.

இத் தலத்தில் வேத தீர்த்தம், குசதீர்த்தம், அசுவத் தீர்த்தம், பத்ம தீர்த்தம், திருப்பாற்கடல் என்னும் ஐந்து தீர்த்தங்கள் உண்டு. திருப்பாற் கடல் தீர்த்தம் தற்போது காணப்படவில்லை. கோவிலுக்குத் தெற்கே நாட்டுக்கே நல் தீர்த்தமாகிய காவிரி நதி ஓடுகிறது.

6. தலப் பெருமைகள்

பரமபதத்தில் தேவிகளுடன் வீற்றிருக்கும் பெருமாள், உலகத்தில் உள்ள உயிர்களுக்கு அருள் செய்யும் நோக்கத்துடனும், தவம்புரியும் பிரகலாதனுக்குக் காட்சி கொடுப்பதற்கும், பிரமனுக்கு வேதப் பொருளை உபதேசித்துக்கொண்டு வேத விமானத்துடன் பெரிய திருவடியாகிய கருடன்பேரில் ஆரோகணித்துக்கொண்டு சுக்ரீவனுடைய மதுவனம் என்னும் கொல்லிமலைக்குத் தெற்கில்,காவிரியின் வடகரையில் உள்ள இத்தலத்திற்கு எழுந்தருளி வேத நாராயணப் பெருமாள் என்னும் திருநாமங்கொண்டு விளங்குகிருர்.

இத்தலம் ஆதியில் கருடனால் ஸ்தாபிக்கப்பெற்றது. சுக்ரீவன் பிரகலாதன் முதலியோர்களுக்குப் பெருமாள் அருள் செய்தது. சித்திரை-மீ பூர்வபட்சம் அஸ்த நட்சத்திரம் புதன்கிழமை சப்தமிதிதி சேர்ந்த அருணோதய வேளையில் பகவான் பிரகலாதனுக்கு வேத விமா

னத்துடன் காட்சி கொடுத்தது. திருநறையூர் அரைய ருக்கு மோட்சம் அளித்தது. (இதன் வரலாறு பின்னே சேர்க்கப்பெற்றுள்ளது) எனவே பிரமன், பிரகலாதன், சுக்ரீவன், கருடன், அநுமான், அரையர், சோழர் முதலி யோர் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளார்கள். இத்தலம் ஆதிரங்கம் அதாவது முதல்ரங்கம் என்று போற்றப் படுகிறது. ஸ்ரீரங்கத்தைப்போலவே பெருமாள் ஆதி சேடன்மீது பள்ளிகொண்டுள்ளார்.

"*Tirunarayanapuram :*— 9 miles west of Musiri. Population 505. The place is known as Adirangam, the first Rangam of Vishnu. The figure of the God in the Vishnu temple is in a recumbent position as in the Srirangam temple, and the place is thus held to be a miniature Srirangam. On the big dwaja stambha in front of the temple is a sculptured figure of Hanuman which is worshipped with the somewhat unusual offerings of sheep & goats"

(Trichinopoly Gazetteer)

7. திருப்பணிகள்

இக்கோயிலின் திருப்பணிகள் அவ்வப்போது நடந்து வந்திருக்கின்றன. கோபுர வாயிலின் கதவு சுமார் 120 வருடங்களுக்குமுன், (கலி 4933-நள-வருடம் மாசி-மீ 21-உ) போடப்பட்டிருப்பதாகத் தெரியவரு கிறது. பிறகு சமீபத்தில் 1949-ம் ஆண்டில் ராஜ கோபுரம், விமானங்கள், பொன் மண்டபம் முதலியவை புதுப்பிக்கப் பெற்றும், தளவரிசை போடப்பட்டும், சுமார் பதினேழாயிரம் ரூபாய் செலவில் திருப்பணிகள் நிறைவேறி விரோதி வருடம் ஐப்பசி-மீ 12-ந்தேதி 28—10—49 வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக வைபவம் (சம்புரோக்ஷணை) நடைபெற்றது. அதற்குப் பிறகு

மாரியம்மன் கோயிலில் திருப்பணிகள் செய்யப்பட்டு (14—6—51)ல் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இக் கோயிலின் முற்காலத் திருப்பணிகளைப்பற்றிய 'திருப்பணி மாலை' என்னும் நூலில் உள்ள பாடல்கள் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன.

8. சிற்பச் சிறப்புக்கள்

மூலப்பெருமாள் பள்ளிகொண்டுள்ள ஆதிசேடனுக்குப் பத்து முகங்கள் உள்ளன. கல்கொடுங்கைகள் வேலைப்பாடு உடையன. சுற்றுச் சுவர்களில் அனுமார், யோக நரசிம்மன் முதலிய சிற்பங்கள் உள்ளன. வெளியே கல் தூணில் கருடன், அனுமான், சங்கு, சக்கரம் முதலிய வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே முற்கால நாகரிகத்துக்கு முக்கியமான சிற்பக் கலைக்கு அடையாளமாக இக்கோயிலில் சில வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9: தினப் பூஜையும் திருவிழாக்களும்.

இக் கோயிலில் உள்ள மூர்த்திகளுக்குத் தினந் தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் ஆராதனைகளும், சாளக்கிராமத்திற்குத் திருமஞ்சன அபிஷேகமும் நடைபெறுகின்றன. உற்சவருக்கு மாதந்தோறும் வரும் ஏகாதசி நாட்கள், அமாவாசை, திருவோண நாள், மாதப்பிறப்பு என்னும் ஐந்து காலங்களில் (பஞ்சபருவம்) அபிஷேகம் நடைபெறுகிறது. பள்ளிகொண்ட பெருமாளுக்கு வருடத்தில் ஆனிமாதம் கேட்டை நட்சத்திரத்தில் ஜேஷ்டாபிஷேகம் (தைலம் சாத்துல்) நடைபெறும்.

திருவிழாக்கள்:- ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் 21 நாட்கள் அத்தியயன உற்சவம் நடைபெறும். இதில் பகற்பத்து, இராப்பத்து உற்சவங்களும், வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறப்பும் நடைபெறு

இன்றன. வைகாசியில் 10 நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறும். திருவோணத்தில் தேர் நிகழும். மேலும் சித்திரையில் கஜேந்திர மோட்ச உற்சவமும், ஆனியில் ஜேஷ்டாபிஷேகமும், ஆடியில் திருமடல் உற்சவமும், ஆவணியில் கிருஷ்ணன் பிறப்பு—உறியடி விழாவும், புரட்டாசியில் 10 நாட்கள் வரை நவராத்திரி விழாவும், 10-ம் நாள் விஜயதசமி விழாவும், ஐப்பசியில் தீபாவளி நாளில் புது ஆடை அணிவித்தலும், கார்த்திகையில் சுடலை உற்சவமும், தைமாதத்தில் சங்கிராந்தி உற்சவமும், கனு உற்சவமும், பாரிவேட்டையும், மாசி மகத்தில் சுவாமி காவிரி ஆற்றுக்குச் செல்தலும், பங்குனி உத்திரத்தில் சுவாமி புறப்பாடும் ஆகிய உற்சவங்கள் நடைபெறுகின்றன. மாசி மகத்திலும், சித்திரை மாதத்திலும் பெருமாள் காவிரி ஆற்றிற்குச் சென்று பவனிவரும்.

10. வருமானமும் சொத்துக்களும்.

இக் கோயிலுக்கு ஆண்டுதோறும் முப்பது ஆயிரம் ரூபாய் ரொக்கமும், ஆயிரங் கலம் நெல்லும் வருமானமாகக் கிடைக்கின்றன. தலம் இனும் கிராமம். இந்தக் கிராமத்தின் விஸ்தீரணம் 363 ஏக்கர். இதில் 148 ஏகர் படுகையும் காவிரியுமாக உள்ளன. மீதி உள்ளவைகள் தான் தற்போது இருக்கின்றன. படுகை நிலமும் காவிரி வெள்ளத்தால் சேதமாகாதபடி பாதுகாத்தல் நலம். கோயிலுக்குத் திருவாபரணங்கள் இல்லை. வாகனங்கள் மரத்தாலாகியவை.

11. நிர்வாகம்.

இத் தலத்தின் நிர்வாகம் லால்குடி தேவஸ்தான கமிட்டியில் இருந்துவந்தது. 1944-ம் ஆண்டிலிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்பின் (Hindu Religious & Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்துவருகிறது. 1947-ல் ஸ்கீம் ஏற்பட்டு 1948-ல்

நியமிக்கப்பெற்ற நிர்வாகத் தலைவர் கோயில் காரியங்களைக் கவனித்துவருகிறார். தர்மகர்த்தர் மூவரும் உடனிருந்து கவனித்து வருகிறார்கள்.

12. கல்வெட்டுக்கள்

இக்கோயிலின் பழமையையும், முற்கால மன்னர்களின் தர்மங்களையும் அறிவிப்பதற்குப் பல கல்வெட்டுக்களும், தாமிர சாசனங்களும் உள்ளன. இவைகள் சர்க்காரால் பிரதிகள் செய்யப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களால் பல செய்திகள் தெரியவருகின்றன. முற்காலத்தில் திருநாராயணபுரம் தேவஸ்தானம், திருச்சிராப்பள்ளி கஸ்பா வகையரா விட்டுக் கட்டித் தாலூகாதொட்டியம் மாகாணத்தைச்சேர்ந்ததென்றும், இவ்வூர்ப்பகுதி இராஜராஜவளநாடு-ஐகரைநாடு என்று வழங்கப்பட்டதென்றும், பெருமாளுக்குத் திருநாராயணபுரத்து நாயனார் என்றபெயர் வழங்கி வந்ததென்றும், கோயில் காரியங்களுக்கும், நந்தவனக் கைங்கரியத்திற்கும் வரியில்லாமல் பூதானங்கள் செய்யப்பட்டு வந்ததென்றும், அக்காலத்தில் ஏர்வரி, இனவரி, இடையர்வரி, மனை வரி, ஆள் வரி, முதலிய வரிகள் இருந்தனவென்றும், வேறு பல செய்திகளும் தெரியவருகின்றன. கல்வெட்டுச் செய்திகள் வருமாறு ;—

1. R. No. 1553 திருச்சினாப்பள்ளி கசுபா வகையரா, விட்டுக்கட்டித் தாலூகா தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுரம் தேவஸ்தானம் ஏட்டுச் சாசன நகல். திருநாராயணபுரம் வேத நாராயணப் பெருமாளுக்கு திருச்சியை ஆட்சிசெய்த ஸ்ரீ விசயரெங்க கிருஷ்ண முத்துவீர சொக்கநாத நாயக்கர் பூமிதானம் செய்தது. இதில் மன்னன் பின்வருமாறு புகழப்படுகிறான்.

“முன்மொழி விநோதன், முத்தமிழன், அழகுக்கு அனங்கன், சொல்லுக்கு அரிச்சந்திரன், வில்லுக்கு

விசயன், பெலத்துக்கு வீமன், அர்த்தத்துக்குத் தனதன், மதத்துக்கு மன்னியன், பரிக்கு நகுலன் கடகரிஒகையன், கொடைக்கு கர்ணன், வாழ்வுக்கு குபேரன், பொறுமைக் குத் தருமன், ஒளிக்குக் கதிரவன், அழகுக்குச் சந்திரன், வீரத்தில் விக்கிரமாதித்தன், அன்னதானத்துக்கு அன்ன சத்திரசோமன், தன்ருரதாரன், பரதார சகோதரன், தனலட்சுமி, தான்யலட்சுமி, சந்தானலட்சுமி, சவுபாக்கிய லட்சுமி, வீரலட்சுமி, விசயலட்சுமி, வரலட்சுமி, மகா லட்சுமி துரந்தரன் இப்படி எனப்பட்ட புகழ் பூண்டு"

இதில் காணப்படும் தர்மங்கள் பின்வருமாறு :—

"அல்லவைகழிந்து நல்லவை நாடி கோன் மெலியச் சூடி, தன்னையும் ஆறில் ஒன்று கடமை கொண்டு அருள் பெருக, அனம்புறந்த (அறம்புரிந்த) ஆகமசாலையும் அந்தணர் வேள்வியும், வேத ஒலியும், விழவொலி வீதி யும், தபோதனர் மடங்களும், தர்மச் சாலையும், தண் ணீர்ப்பந்தலும், காபறஷ்த்தமும் இப்படிக்கொத்த தர்மங் களுக்கும் உள்ளாய் நடந்து"

111709

இந்தச் சாசனத்தின் காலம் :—

"சாலிவாகன சகாப்தம் 1619, கலியப்தம் 479 இதின் மேற்செல்லா நின்ற வெகுதான்ய-ஸு தை-மீ 19-உ அமாவாசையும் சுக்கிரவாரமும் திருவோண நட்சத்திரமும் சுபயோகமும் சுபகரணமும் பெற்ற சுப தினத்தில்" (கி. பி. 1696)

இச்சாசனத்தின் முடிவுப் பகுதி :—

"ஸ்ரீ வேதநாயகி சமேத ஸ்ரீ வேதநாராயணசுவாமி யார் திருவிளையாட்டத்துக்கு பூதான தர்மம் சாசனப் பட்டயம் பண்ணிக்கொடுத்தோம். இந்த தர்ம சாதனத் தை யாதாமொருவன் விகாதம் பண்ணினவன் மாதா பிதாவையும், கங்கைக்கரையிலே காராம் பசுவையுங் கொன்ற தோஷத்தை அனுபவிக்கக் கடவனாகவும்"

2. **R. No. 1555.** கோயில் அர்த்த மண்டபத்துக்குத் தென்புறத்தில் உள்ளது. நெமலி உடையான் பூமிதானம் செய்ததைப் பற்றியது. அதன் விபரம் வருமாறு:—

"ஸ்வஸ்தி ஸ்ரீ திருச்சிராப்பள்ளி கசுபா வகையரு விட்டுக்கட்டித் தாலூகா தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுரம் தேவஸ்தானத்தில் விமானத்துக்குக் கீழ்புறம் அர்த்தமண்டபத்துக்குத் தென்புறம் சிலாசாதனத்திலே எழுதியிருக்கப்பட்டது. இருபத்து மூன்றடி நீளத்துக்கு நால்வரியில் எழுதியிருக்கப் பட்டது".

"திரிபுவன சக்கிரவர்த்தி கோன்நேரின்மைகொண்டான் வடகரை இராசராச வளநாட்டு அய்கரை இராசராச நாராயணன் திருநாராயணபுரத்து நாயனுர் – வேத நாராயணப் பெருமாள் திருச்சுற்றிலும் மலேக்கூற்றத்துத் தச்சனேன் நெமலி உடையான் உய்யக்கொண்ட பிள்ளையான வாணுதராயர் வைத்த அகரம் வாணுதராயச் சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்குச் சோழவள நாட்டில் நட்டுப்பற்றலியர்...தேவியும் இவ்வூரால் வரும் நஞ்சை புஞ்சை நத்தமும் நத்தப்பாடும் குன்றமும் குன்றப்பரப்பும் நீர்நிலேயும் நீர்நிலேக் குடிப்பரப்பும் நத்தங்களும் அங்ஙனமுள்ளிட்ட படுகையும் உதகாதி பூர்வபூதான இறையிலியாகத் தந்தோம். இத்நூல் வரும் நெல்கடமை காசுக்கடமை நத்தம் மராமத்து விநியோகமாகத் தந்த கைப்பசை வேஷ்டிபாட்டம், பஞ்சுமாலி, சாத்துவீகபாகம், ஆனேச்சாலேக்கு வைத்த எண்ணெய்ப் பந்தும் இலாகுசினே பெறுமதின் தேவைத் தறிகின்ற - செக்கிரைகட - ஓடாலி தட்டாரபாட்டம். ஏர்வரி - இனவரி - இடையர்வரி - மனேவரி - ஆள்வரி - ஆத்தங்கரை தேவை உள்ளிட்ட பல உபாதிகளும் தவிர்த்து. செந்நெல் - செங்கழுநீர் - கரும்பு - மா-பலா - இஞ்சி - மஞ்சள் - தெங்கு - கமுகுகொடி உள்ளிட்ட

தான வேண்டின பயிர்செய்துகொள்வதாகவும் சொல்லி நம்வரியிவ்வாறு கல்லிலும் வெட்டிக்கொள்க. இவை தச்சநெமலி உடையான் கையெழுத்து. இவை வாணுத்திரி ராயன் கையெழுத்து ".

3. **R. No. 1557.** தாம்பிர ஏட்டுச் சாசனம் (5 plates) மகாபலிவாணராயன் என்னும் அரசன் சதுர்வேதிமங்கலம் பட்டர்களுக்கும், ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் கோயிலுக்கும் மானியமாக விட்ட மனைப்பங்கு—பூமிதானம் முதலிய செய்திகளைக் கூறுகிறது. இதில் சுமார் 70 பேர்களுக்கு மேலான பட்டர்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

4. No. 128—1909 கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை தாலூகா கொழுமம் குமரலிங்கத்தில் உள்ள கரிவரதராஜப் பெருமாள் கோயிலின் தென்புறத்தில், ராஜகேசரி கோனேரி மேக் கொண்டான் (கோன்-நேர்-இன்மை கொண்டான்) வீர ராஜேந்திர தேவ சோழன் காலத்தில், (கி. பி. 1207 C. 1236) திருநாராயணபுரம் எம்பெருமான் வேதநாயகப் பெருமாளின் நந்தவன கைங்கரியத்துக்காக நிலம் தானம் செய்யப்பெற்ற குறிப்பு. (வீர ராஜேந்திர சோழன் குலோத்துங்க சோழனுடைய குமாரனுகக் கருதப்படுகிறது.)

13. புராண வரலாறுகள்.

1. **பிரகலாதன் வரலாறு.** பிரம்மாண்ட புராணத்தில் பிரம்மா, நாரதருக்கு உபதேசித்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தாரால் பிரதி செய்யப்பட்டுள்ளது. (R. No. 1554) இதன் விவரம் பின்வருமாறு ;—

" திருச்சிராப்பள்ளி கசுபா வகையரா விட்டுக்கட்டி தாலூகா தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த

திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் கோவில் பிரம்மாண்ட புராணத்துக்கு நக்கல் — பிரமாண்ட புராணத்தில் பிரம்மா நாரதருக்கு உத்தரம்—

காவேரி வடகரை வேதநாராயண சுவாமி எழுந்தருளி யிருக்கிறார். அவர் சந்நிதானத்தில் வேதம் ஆறு சாஸ்திரம் சகல ஆகமபுராணங்கள் சகலமும் அதிகரிச்சு போய் துவாதசாக்ஷா நிஷ்டனுய்ப் பூசைபண்ணி சகல பீஷ்ட * * * பிரம்மாவைப் பார்த்துச் சொன்ன பிரகாரம் ஸ்ரீ வேதநாராயண சுவாமி என்ற * * மாக எனக்குச் சொல்லவேணும் என்று கேட்கிறபோது பிரம்மா * * * கோவில் வாசலிலே இருக்கிற செய விசயர்கள் சாபகாரணத்தினுலே அசுர * * * * * பிரகலாதர் என்று ஒரு பிள்ளை பிறந்தான், அவன் பாலியத்திலே அதிபக்தனுயிருக்கிறபோது * * வதம் பண்ண வேணுமென்று சருவப் பிரயத் தினமும் பண்ணினுன். இவருடைய * * * பக்தியும் இல்லாமலிருந்தது, அப்போது அரியானவர் மகா கோபத்துடனே கம்பத் * * பண்ணுகிற போது பிரம்மா முதலான சகல தேவதைகளும் வந்து சந்தோஷத்தோடே * * * * தேவேந்திரன் கிட்டப் போகச் சொல்லிச் சொல்லுகிறபோது பிரக லாதன் * * * உனக்கு வேண்டிய வரனைக் கேட்டுக்கொள்ள * * * இராச்சியமும் இந்த இரண்டைத் தவிர * * வரை ஒன்றுந் தேவை யில்லை. * * காவேரிக்கு வடகரையிலே காசிக்கு ஆபத்தீசுரனுடைய கரையிலே * * * அங்கே நாம் வந்து உன்னுடைய மனோபீஷ்டத்தைக் கொடுக் கிறோம் என * * சிறிது நாள் ராச்சியபாரம் பண்ணிப் பின்பு வேதநாராயண க்ஷேத்திரத்தில் தபசு பண்ணுகிறதுக்கு யத்தனம் பண்ணுகிறபோது சுக்கிரீ வரும், அனுமாரும் அவ்விடத்திலே வந்து பிரகலாதரைக் கண்டு சமாசாரம் கேட்கிறபோது பிரகலாதர் ஸ்ரீ வேத நாராயண சுவாமி இங்கே வரும்படியாகத் தபசுபண்ண வேணும் என்று சொன்னுர். சுக்கிரீவர் உம்முடைய

தவசுக்கு விக்கினம் வராமல் இராட்சதர்களைத் தடுத்து தபசு நிறைவேறப் பண்ணுகிறேன் என்று சொன்னார். பிரகலாதர் கிரீஷ்மகாலத்திலே பஞ்சாக்கினி மத்தியிலே யிருந்து வருஷாகாலத்திலே வெய்யிலிலேயிருந்து ஏமந்த காலத்திலே செபத்திலேயிருந்து * * கொண்டு மிக உக்கிரமாய்த் தபசு பண்ணுகிற வேளையிலே இந்திரன் முதலாயிருக்கிற தேவதைகள் எல்லாங் கூடி மன்மதவசந்தர்கள் அப்சரஸுக்களோடே தபசை விக்கினம் பண்ணச் சொல்லி யனுப்பிவிச்சார்கள்! அவர்கள் வந்தவிடத்திலே சுக்கிரீவ * * * * தம்முடைய மதுவனத்திலே யிருந்து கொல்லிமலைக் காய், கிழங்கு புஷ்பம், மதுரங்கள் எல்லாம் கொண்டுவந்து கொடுத்துப் பிரகலாதரை யதிதி பூசை பண்ணச்சொல்லி * * * * * பிரகலாதனும் அவர்களுக்குப் பூசை பண்ணினார்! * * * அவர்கள் பிரகலாதனுடைய பூசையினாலே மிகவும் சந்தோஷப்பட்டு உமக்குத் தபசு சித்தியாகிறது என்று சொல்லிப் போட்டுத் தேவலோகத்திலே போய்த் தேவேந்திரனோடே சொன்னார்கள்! தேவேந்திரனும் இதைக்கேட்டு வெகு (விய)சனத்தோடே தேவதைகள் எல்லாரையுங் கூட்டிக் கொண்டு பிரம்மலோகத்திலே போய்ப் பிரம்மாவோடே சொல்லுகிறபோது பிரம்மாவும் பிரகலாதனுடைய மனோபீஷ்டத்தை நம்மாலே கெடுக்கக்கூடாது என்று சொல்லிச் சகல தேவதைகளையுங் கூட்டிக்கொண்டு சத்திய லோகத்திலேயிருந்து க்ஷீர சமுத்திரத்திலே கரையிலே போய்ச் சுவாமியைத் தோத்திரம்பண்ணினார் அப்போது சுவாமி பிரத்தியக்ஷமாய் வந்து பிரம்மா எதிரே நிற்கிறபோது பிரம்மாவும் பிரதக்ஷிண நமஸ்க்காராதிகளைப் பண்ணித் தோத்திரம் பண்ணுகிறபோது சுவாமி நீங்கள் வந்த காரியம் எனக்குத் தெரிஞ்சுது! பிரகலாதர் தபசுபண்ணுகிறார்! அது நிமித்தமாய் நான் பிரகலாதனுக்குப் பிரத்தியக்ஷமாக அர்ச்சாவதாரம் பண்ணிக் காவேரிக்கு உத்தர தீர வாசிகளாயிருக்கிற செனங்களாலே சேவிய மானனாய்க் கொண்டு வாசம்

பண்ணுகிறோம் என்று சொல்லிப் பிரம்மா முதலான தேவதைகளை யனுப்பிவிச்சுப்போட்டு அந்தர்த்தானம் பண்ணினார்! பின்பு சிறிதுநாளைக்கு மேல் கெருடரானவர் திவ்விய விமானத்தோடே கூடச் சுவாமியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு புறப்படுகிற சமயத்திலே ஆதிசேஷன் கொடை பிடிக்க பிரம்மா முதலான சகல தேவதைகளும் தோத்திரம் பண்ணக் கெந்தருவரானவர் வீணகானம் பண்ண, அப்சரஸுக்கள் நர்த்தனம் பண்ண. அனேக வைபோகத்தோடே கூடச் சுவாமியை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து திருக்காவேரிக்கு உத்தரதீரத்திலே சீரார் நவசிரசு உடைய மத்தியத்திலே கூர்ம பீடத்திலே எழுந்தருளப் பண்ணினார். பிரகலாதரும் சுக்கிரீவ சுவாமியைக்கண்டு சந்தோஷச் அரி (ச்ரு)தாரைகொண்டு பிரதக்ஷிண நமஸ்காரங்களைப் பண்ணித் தோத்திரம் பண்ணும் இடத்தில் ஸ்ரீ வேதநாராயணசுவாமி பிரத்தியட்சமாய்ப் பிரகலாதரைப் பார்த்துச்சொன்ன பிரகாரம் நீ பண்ணின தபசினாலே சந்தோஷமாச்சுது உனக்குச் சர்வாபீஷ்டத்தையும் கொடுக்கிறேன் என்று சொல்லி பிரதோசஷபம் (ரதோற்சவம்) பண்ணுவிக்கச் சொல்லி ஆக்ஞாபித்தார். பிரகலாதர் பாஞ்சராத்ரப் பிரகாரமாக இரதோற்சவம் பண்ணிவிச்சு அவப்பிருத ஸ்நானமும் பண்ணிவிச்சுக் காவேரியினுடைய உத்தர தீரவாசிகளாயிருக்கிற செனங்களோடே கூடச் சகல வைபோகமும் நடப்பிவிச்சுக்கொண்டு சுகமாக வாசம் பண்ணிக்கொண்டு இருந்தார். சுவாமி எழுந்தருளியிருக்கிற பிரகாரம் * * * அனந்த போக பரியங்கத்திலே சயனிச்சுக் கொண்டு வேதப் பொஸ்தகங்களைத் தலைக்கணை வைச்சுக் கொண்டு பாத மூலத்திலே ஸ்ரீ பூமிகளையும் நாபீகமலத்திலே பிரம்மாவும் இந்தப் பிரகாரமாய் அருச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கிறார் ''

" ஸ்ரீ வேத நாராயணசுவாமி சகாயம் "

(இவ்வரலாற்றுப் பிரதியில் * * * இந்தக் குறியுள்ள இடங்களில் சொற்கள் விடப்பட்டிருக்கின்றன.)

2. திருநறையூர் அரையர் மோட்சம் அடைந்தது.

"முன் ஒருகாலத்தில் பிள்ளை திருநறையூர் அரையர் என்னும் மகாபக்தர் தன் குடும்ப சகிதம் மைசூர் மேல் கோட்டை திருநாராயணபுரம் செல்வப்பிள்ளையை சேவிப்பதற்காக இந்த வழி மார்க்கமாக ஸ்ரீரெங்கம் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களைச் சேவித்துக்கொண்டு இந்த திருநாராயணபுரம் ஸ்ரீ வேதநாராயணப் பெருமாளைச் சேவித்து சிலநாள் நித்யவாசம் பண்ணி காவேரியில் தீர்த்தமாடி நித்தியகர்மாநுஷ்டானுதிகள் செய்து கொண்டு இருக்கிறகாலத்தில் அந்தக் காலத்தில் கோயில் பனை மட்டைகளினுல் கட்டப்பட்டிருந்தது. ஒரு நாள் அரையர், பெருமாளைச் சேவிக்கவரும் சமயத்தில் இதர மதஸ்தர்கள் சந்நிதியில் அக்கினிப்பிரவேசம் பண்ணி விட்டார்கள். அரையராகிய மஹாபக்தர் பெருமாளுடைய திருமேனிக்கு அக்னிபங்கம் ஏற்பட்டுவிட்டதே என்று ரொம்பவும் நொந்து, நைந்து மனது உருகி தானும் தன்னுடைய குழந்தைகள் ஆறுபேருமாக பெருமாளுடைய திருமேனியில் அக்னிபாதை ஏற்படாமல் போர்வையாக ஒவ்வொரு குழந்தையையும் போர்த்துக்கொள்ளும்படி செய்து தானும் பெருமாளுடைய திருமேனியில் போர்த்துக்கொண்டார். குழந்தைகள் அக்னி சுடுதே என்று சொல்லின. சற்றுப் பொறுங்கள் குளிர்ந்துவிடுவோம் என்று சொன்னுர். உடனே அக்னி நின்றுவிட்டது. பெருமாள் அரையருக்கு சுந்தரரூபத்துடன் சேவை சாதித்து மோக்ஷம்கொடுத்தார்."

"பிள்ளை திருநறையூர் அரையர் திருமேனியை உபேக்ஷித்தாற்போல" என்கிறவாக்யம் ஸ்ரீ வசன பூஷணத்தில் வருகிறது. இதற்கும் பிள்ளை லோகாசாரியார் அபாரமாக வியாக்கியானம்செய்து இருக்கிருர். அரையருக்கு மோக்ஷம் கொடுத்த இடம் இது. ஆசாரியருடைய அபிமான க்ஷேத்திரம் இது. முன்காலத்தில் உடையவர், ஸ்ரீ ராமாநுஜர். மைசூர் மேல்கோட்டை

போகுங்காலத்தில் இந்தப் பெருமாளை ஆராதித்து காஷாயம் களைந்து வெள்ளை உடுத்திக்கொண்ட இடம் இது.''

பெருமாள் கெருடனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தினத்தின் சுலோகம் :

விபவாப்தே மீனசைத்ரே ஸோமபே ஸௌம்ய வாஸரே!
சப்தம்யாம் பிரதமே பக்ஷேசங்கமே கால சப்தமே!!
க்ஷீரார்ணவ ஸரோர்மத்தியே கூர்மபீடே ககாதிப:
விமாநம் ஸ்த்தாபயாமாஸா ஸ்ரீவேதநாராயணஸகீ.

ஸ்ரீ வேதநாராயண ஸ்தலத்தின் மாஹாத்மிய சுலோகம் :

காவேர்யாம் உத்தரே தீரே வேதநாராயண ஸ்த்தலே!
ஸதா ஸிந்து முகேபூத்வா பிரஹ்லாத பரிபூஜித:!
வர்த்ததே ஸந்நிதானேன சர்வேஷாம் போகமோக்ஷயோ:
ஸ்ரீ வேதநாராயண ஸ்ரீமாங்க்ஷீரார்ண வநிகேதந:!
ஸ்ரீமதே பிரம்மகுருவே வேதமந்திரஸாயிநே!
நமோ பகவதோர்த்தேவ வேதநாராயணாயதே!
வேதசேவ்யோ வேதராசி வேதப்பிரும்மகுருர்நம:!
வேதநாயக வேதாங்கோ வேத நாராயணப்பிரபுஹு:
ஸ்ரீவேதநாயகீஸமேத ஸ்ரீவேதநாராயண
பரப்பிரம்மணோநம:

(இது தேவஸ்தானத்தார் கொடுத்த குறிப்பு.)

14. துதிப்பாடல்கள்.

(1) 'வேத நாராயணப் பெருமாள் திருப்பணிமாலை' முற்காலத் திருப்பணிகளைப்பற்றிய நூல், தெலுங்கு உரையுடன் உள்ளது. R. No. 1510 எண்ணுள்ள அரசாங்கப்பிரதி.

"திருச்சினுப்பள்ளி கசுபா விட்டுக்கட்டித் தாலூகா திருநாராயணபுரம் தேவஸ்தானம் திருப்பணிமாலே தெலுங்கு உரையுடன்"

1. ஆதியிலே திருபுவன சக்கிரவர்த்தி
ஆனந்த மணிமாடக்கோயில் செய்தான்
வேதியர்கள் முனிவர்கள் திருப்
பிரதிட் டைவிதவிதமணி பண்ணி
வீதியணி யணியாய் வாழ
மாதுளங்கவீண மணி வாணிசொல்லும்
மதுரகவி.யெதிராசர் மகுடந்தரித்த
நீதிஜெக சக்கிரவர்த்திராயன்நீள் நிலத்தில்
நியாயமாய் வாழியாமே.

2. சோதிமதி வந்துதவிழ் சோலேசூழுஞ்
சோபனஞ்சேர் ஊரில் வாழுங்
கோதில ராமாழ்வார்கள் பிரபந்தப்பாடற்கூறு
கலேப் பொட்டக விமானத்துள்ளே
சாதிமணி மாணிக்கமதி விளேந்த
சதுரமாய்க் கோபுரத் திருப்பணிகள்செய்தான்
நீதிபுகழ் திருபுவன சக்கிரவர்த்தி
ராயன்நீள் நிலத்தில்நிற்க மிகவுந்தானே.

3— பிருது சக்கிரவர்த்திக்குச் சேவையடிசாதித்த
பெருமாள்நாரண பண்டாரிகுலதிலக
பானுமண்டல மேவுபங்கேரு காட்ச நிதியன்
பதி சக்கிரவர்த்திவாழ் பார்த்திவர் பணிந்தேத்தும்
பரமணி நாராயணன் பைந்துளப மாலேயணி
அலங்காரபுஜ பராக்கிரமன் சக்கிராயுதன்
விதிசக்கிரவர்த்தி புகழ் சிபிசக்கிரவர்த்திக்கு
வெகுமான மானபெருமாள் நிதிச்சக்கிர வர்த்தி
[புணர்

மதுசக்கிர வர்த்திவளர் நரசக்கிரவர்த்தி தொழவே
நரசக்கிரவர்த்தி மகிழ்வேதநாராயணர் நாமம்
[ஆயிரம் வாழியே.

4. மதிமகிழு மணவாள மாமுனிகள் சுருதியினுல்
மனமகிழ வந்த பெருமாள்
மதிளரங் கேசரிடமணி கிரண
நவரத்தின மகுடந்தரித்த பெருமாள்
விதிவச்சிர பாணிமுதல் முப்பத்து முக்கோடி
தேவர்கள் விதித்த பெருமாள்
விஷ்ணு மணிகிருஷ்ண குலரெக்ஷண விசக்ஷண
விலக்ஷணமறிந்த பெருமாள்
நிதிகோடி தேடிவரும் நித்தியகுல பிரகலாதருக்கு
நிலவரஞ் செய்த பெருமாள்
நால்வேதம் நாற்பத் தெண்ணுயிரம் இருஷிகள்
ஆதரின வந்த பெருமாள்
சுருதி மதுரகவி யாழ்வார்கள் அனைவரும்
தோத்திர பிரபந்த மிடவே
சுகவசன மனமகிழ வேத நாராயணர்
திருவடிகள் மிக வாழியே.

5. கனகமணி கசிதநவகன கொம்பு
மகரக்கொழை கஸ்தூரி திருநாமமுங்
கல்யாணமான புஜசங்க சக்கிரங்களும்
கர்ணுவதம்சங்களும்
கனகநககிரி திண்டு தலகாணியும்
கமனீயவடி வில்லையுங் கண்டசரமாலையும்
குண்டல கடுக்கனும் காஞ்சிமணி கடிசூத்ரமும்
ஜனககுலமணி சீதாப்பிராட்டியார் சிங்கார மணி
[மாலையுஞ்
சகன்மோகனகரமான பாண்டியக் கொண்டையுஞ்
சவுந்தரிய திருவாசியும்
வனசமுனி மதிமேவு வேதநாராயணன் மனமகிழ
வேயளித்தான் வகுள பூஷண ராசமணி
சக்ரவர்த்தி வசுமதியில் மிகவாழியே".

(2) பிரகலாதர் செய்தருளிய **வேதநாராயண ஸ்தோத்திரம்** கிரந்தத்தின் தமிழ் உரை:

1. ஸ்வாமி பகவானே! நீர் மதத்துக்கெல்லாம் ஈஸ்வர ராகவும் பரம புருஷராகவும், பிரகிருதிக்கு பரமாத்மா வாகவும் இருக்கிறீர். உம்முடைய சங்கல்பத்தினுல் நாபியில் இருந்து கமலம் உண்டானது, அந்தக் கமலத்திலிருந்து சதுர்முகன் உண்டானுர்.

2. ஸ்வாமி, ராமாபதியே! உம்முடைய முகத்தி லிருந்து இந்திரன், அக்னி, பிராமணர் உண்டானுர்கள். உம்முடைய நேத்திரங்களிலிருந்து சூரியன் உற்பத்தி யானுன். இருதயத்திலிருந்து சந்திரன் உண்டானுன்.

3. இருதயத்திலிருந்து பிராணவாயுக்களும், கர்ணத் துவயங்களிலிருந்து திக்குகளும், புஜங்களிலிருந்து ராஜாக் களும், நாபியிலிருந்து அந்தரிக்ஷங்களும் உற்பவித்தார்கள். சிரசிலிருந்து ஸ்வர்க்கலோகங்களும் உண்டாயின.

4. எங்கெங்கே அங்கத்தினின்றும் எவரெவர் உண்டா யினுரோ, அந்தந்த அங்கத்தை அவரவர் ஆஸ்ரயித்திருக் கின்றனர்.

5. ஆறு குணத்துக்கு மேம்பட்டவரே, ஷாட்குண்ய மூர்த்தியே, குணபரபூரணமானவரே, தெரிந்தும் தெரியா மலும், அணுவிலும் மகாமேருவிலும் வாசம்செய்கிற உமக்கு நமஸ்காரம்.

6. எங்கும் நிறைந்தும் எல்லாவற்றிற்கும் குருவான உமக்கு நமஸ்காரம். ஸ்வாகா ரூபமாகவும், ஸ்திரி ரூபமாக வும், காரியமாகவும் கர்த்தாவாகவுமாகிய உமக்கு நமஸ்காரம்.

7. ஈஸ்வரராகவும், ஈஸ்வர ரூபமாகவும், உள்ளும் புறம்பும் வியாபித்தும், காரணமாகியும், காரியமாகியும் பரவஸ்துக்கெல்லாம் முதன்மையானவரும், பிரம்மரூபியு மான உமக்கு நமஸ்காரம்.

8. ஐந்து மூர்த்தியான உமக்கு நமஸ்காரம். ஐந்து பூதாத்மாவான உமக்கு நமஸ்காரம். பனிரண்டு சூரிய

ரூபியான உமக்கு நமஸ்காரம். அனேக ஆத்ம ரூபியான உமக்கு நமஸ்காரம்.

9. ஏக ரூபமாகவும் வெளியில் காலரூபியான உமக்கு நமஸ்காரம். புருஷர்களின் மனதில் வாசம்செய்துகொண்டு பந்தம் மோட்சம் என்னும் இரண்டையும் அருளிச் செய்கிறீர்.

10. வேதத்தின் சூரியன் போன்றவரே, உமக்கு நமஸ் காரம். வேதத்தின் தேஜசாயிருப்பவரே, உமக்கு நமஸ் காரம். வேதத்தின் ஆத்மாவாயிருக்கிற உமக்கு நமஸ் காரம். வேதாந்த ஞானிகளால் சேவிக்கப்படுகிறவரே, உமக்கு நமஸ்காரம்,

11. மாயையினால் வாசுதேவன் என்கிறவரே, பயங்கர மான சம்சாரம் என்னும் காட்டுத் தீயினால் ஸ்ரமப்படுகிற என்னை நீர் ரக்ஷிக்கவேண்டும்.

12. லக்ஷிமிவாசமானவரே மலர்மகனுக்கு குருவே, வேதத்தின்பேரில் எழுந்தருளி இருப்பவரே, ஆறு குணங் களுக்கு மேம்பட்டவரே, **வேதநாராயணன்** என்னும் பேருடையவரே, உமக்கு நமஸ்காரம்.

(இந்த உரை அர்ச்சகம் லட்சுமணய்யங்கார் எழுதியது.)

(3) பொதுப்பாடல்கள்.

1. உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரணங்களே.

அனுமான்.

2. அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன் [றைத் தாவி
அஞ்சிலே யொன்றாக ஆருயிர்காக்கவேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற அணங்கைக்கண் [டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தான் அவனம்மை [யளித்துவைப்பான்.

கருடன்.

3. கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ(டு)
இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற்
[குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்துதோன்றினன்.

பிரகலாதன்.

4. தேமனுரிமை புரியத் திசைமுகத்தோன்
ஓமமியற்ற உடையான் முடிசூட்டக்
கோமன்னவனுகி மூவுலகுங் கைக்கொண்டான்
நாமமறை யோதாதோதி நனிஉயர்ந்தான்.

திருமால்.

5. நெய்க்குடத்தைப் பற்றிஏறும் எறும்புகள்போல்
[நிரந்தெங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் காலம்பெற
[உய்யப்போமின்
மெய்க்கொண்டு வந்துபுகுந்து வேதப்பிரானர் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று
[பட்டினங்காப்பே.

6. ஏதங்களாயின வெல்லா மிறங்கவிடுவித்து
[என்னுள்ளே
பீதகவாடைப் பிரானர் பிரமகுருவாகிவந்து
போதில்கமலவன் னெஞ்சம்புகுந்து
[மென்சென்னித்திடரில்
பாதவிலச்சினை வைத்தார் பண்டன்று
[பட்டினங்காப்பே.

7. ஒருநாயகமா யோட வுலகுடனுண்டவர்
கருநாய் கவர்ந்தகாலர் சிதைகியபானையர்
பெருநாடுகாண இம்மையிலே பிச்சைதாம்கொள்வர்
திருநாரணன் தாள்காலம்பெறச் சிந்தித்துய்மினே.

Q22:33.21192-T6
N53

8. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

9. பச்சை மாமலைபோல்மேனி பவளவாய்க்
[கமலச்செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தேஎன்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா
[நகருளானே,

10. வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாதகாதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ
ஆளா வுனதருளே பார்ப்பனடியேனே.

11. தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வுஅறியா
மனம்தரும் தெய்வவடிவும்தரும் நெஞ்சில்
[வஞ்சமில்லா
இனம்தரும் நல்லனஎல்லாந்தரும் அன்பர்
[என்பவர்க்கே
கனம்பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

12. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

——oo——

11209

ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் திருவடி சரணம்.

திருச்சிராப்பள்ளி யுனைட்டெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.

6e
7B
8-64